ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2294/50 - 2022 අගෝස්තු මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.08.25

2294/50 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 84 (7) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான/மற்றும் சபையினால் செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கழிவுநீர் அமைப்பு தொகுதிக்கு/வலையமைப்பிற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ள பாவனையாளர்களின் கழிவுநீர் அமைப்புக்குரிய கட்டணமானது 2022.09.01 ஆந் திகதி முதல் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.*

*1738/7 ஆம் இலக்க மற்றும் 2011, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் 2012, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் கழிவுநீர் கட்டணம் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு பதிலாக இவ்வறிவித்தல் வெளியிடப்படுகின்றது.*

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*

*பத்தரமுல்லை,*

*2022, ஓகத்து 25.*


1A - G 37337 — 11 (2022/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எந்தவொரு வளாகமாயினும் மாதாந்த கழிவுநீர் அமைப்புக் கட்டணத்துக்கு பாவனைக் கட்டணம், மாதாந்த சேவைக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் மற்றும் உரிய வரி தொகைகள் உள்ளடக்கப்படும். நீர்ப்பட்டியலில் பொதுவாக மொத்த மாதாந்த நீர்/கழிவுநீர் அமைப்பு கட்டணம் சுட்டிக்காட்டப்படுவதுடன், பாவனையாளரொருவருக்கு தனது நீர்ப்பட்டியலுக்கு மேலதிகமாக பெறுமதி சேர் வரி/ இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT/SVAT) விலைப்பட்டியல் (Invoice) ஒன்று தேவைப்படுமிடத்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் முன் பதிவினை மேற்கொள்வதன் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### கட்டண விதிப்பு - I

வீட்டு கட்டண விதிப்பு - வீட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் அறவிடப்படும் கட்டணம்.

| நீர் பாவனை (கன மீற்றர்) | கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா) | மாதாந்த சேவைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1-10 | 01.50 | 200.00 |
| 1-15 | 02.00 | 200.00 |
| 1-20 | 03.00 | 300.00 |
| 1-25 | 03.50 | 300.00 |
| 1-30 | 05.50 | 300.00 |
| 1-40 | 08.50 | 300.00 |
| 1-50 | 11.00 | 300.00 |
| 50 இற்கு மேல் | 13.50 | 300.00 |

### கட்டண விதிப்பு - II

வணிக கட்டண விதிப்பு - அரசாங்க மற்றும் தனிப்பட்ட கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கடைகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள், உணவகங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள் மற்றும் அடுக்குமனைகள் தவிர்ந்த வீடு மற்றும் கைத்தொழில் அல்லாத ஏனைய அனைத்து நிறுவனங்கள்.

| நீர் பாவனை (கன மீற்றர்) | கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா) | மாதாந்த சேவைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 0-10 | 67.50 | 1,000.00 |
| 11-50 | 67.50 | 2,000.00 |
| 51-500 | 88.00 | 5,000.00 |
| 500 இற்கு மேல் | 88.00 | 40,000.00 |

### கட்டண விதிப்பு III

கைத்தொழில் சார்ந்த கட்டண விதிப்பு - பாரியளவிலான உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் அறவிடப்படும் கட்டணம்

| நீர் பாவனை (கன மீற்றர்) | கழிவுநீர் அமைப்பு பயன்பாட்டுக் கட்டணம் (ஒரு கன மீற்றருக்கு) (ரூபா) | மாதாந்த சேவைக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 0-10 | 88.00 | 1,000.00 |
| 11-50 | 88.00 | 2,000.00 |
| 51-500 | 94.50 | 5,000.00 |
| 500 இற்கு மேல் | 94.50 | 40,000.00 |

**நிபந்தனைகள்:**

1. அனைத்து நீர் மூலங்களினதும் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு குறித்த மாதத்திற்குரிய நீர் பாவனையை அடிப்படையாகக் கொண்டு வீட்டு செயற்பாடுகளுக்காக, வணிக நடவடிக்கைகளுக்காக மற்றும் பாரியளவிலான உற்பத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் கழிவுநீர் அமைப்பு சேவையின் நிமித்தம் கட்டணம் அறவிடப்படும்.

2. ஏதாவது குறிப்பிட்ட மாதத்தில் பாவனை பூச்சியமாக காணப்படினும் மாதாந்த கழிவுநீர் அமைப்பு சேவைக் கட்டணமானது அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

3. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நீர் இணைப்பிற்கு மேலதிகமாக மாற்று வழிகளில் பல்வேறு நீர் விநியோக முறைகளை பயன்படுத்துவதாயின் அதற்கான பாவனைக் கட்டணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் மேலதிக கட்டணத்தை பாவனையாளர்கள் செலுத்துதல் வேண்டும்.

4. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீர் வழங்கல் சேவை தவிர்ந்த கழிவுநீர் அமைப்பு சேவையை மாத்திரம் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து சபையின் அதிகாரிகள் குழு ஒன்றினால் பாவனையாளரினதும் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்படும் கள ஆய்வுக்கு பின்னர் தீர்மானிக்கப்படும் மதிப்பீட்டு தொகைக்கு அமைவாக கழிவுநீர் அமைப்புக் கட்டணம் தீர்மானிக்கப்படும்.

5. கழிவுநீர் அமைப்பு கட்டணம் செலுத்துவதை புறக்கணிக்கக்கூடிய பாவனையாளரின் சேவை இணைப்பைத் துண்டித்தல்:
மாதமொன்றுக்குரிய நீர் கட்டணத்தை மற்றும் கழிவுநீர் அமைப்பு கட்டணத்தை பட்டியல் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்கு செலுத்துவதை புறக்கணிக்கக்கூடிய பாவனையாளரின் நீர் இணைப்பு மற்றும்/அல்லது கழிவுநீர் அமைப்பு சேவையை 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 88 (I) ஆம் பிரிவின் பிரகாரம் சேவை இணைப்பை துண்டிப்பதற்கு/செயற்பாட்டினை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

6. கழிவுநீர் அமைப்பு சேவையின் செயற்பாடு நிறுத்தப்படுமிடத்து அதனை மீண்டும் செயற்படுத்துவதற்காக மீள் இணைப்புக் கட்டணத்திற்கு மேலதிகமாக குறித்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கான செலவினடிப்படையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் மேலதிக கட்டணத்தை பாவனையாளர்கள் செலுத்துதல் வேண்டும்.

EOG 08 - 0250

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.